# நாடி

Pulse of
the Singapore
Muslim Community

நாடி 31 ஹிஜ்ரி 1438 துல்ஹஜ் செப்டம்பர் 2017

இலவசம்


## புதுப்பிக்கப்பட்ட ஹாஜி முஹம்மது சாலே பள்ளிவாசல்




# இனிய ஹஜ் பெருநாள் நல்வாழ்த்துக்கள்

முஃப்தி நற்செய்தி

# ஈதுல் அத்ஹா 2017/1438 முயிஸ் வாழ்த்துகள்

முயிஸ் மன்றத்தின் தலைமை நிர்வாகி, முஃப்தி, மன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் அனைவரும் புனித ஹஜ் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

செப்டம்பர் முதல்நாள் வெள்ளிக்கிழமை அவர்கள் வெளியிட்ட பெருநாள் செய்தி:

அல்ஹம்துலில்லா, சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தினர் இந்நாட்டில் நிம்மதியாகவும் நல்லிணக்கத்தோடும் வாழ கருணை புரிந்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

புனித பூமியில் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையை நிறைவேற்றும் நமது யாத்திரிகர்களின் ஹஜ்ஜை ஒப்புக்கொள்ள பிரார்த்திப்போம். அல்லாஹ் யாத்திரிகர்கள் அனைவரையும் பாதுகாத்து அவர்களது புனிதப் பயணம் சிரமமின்றி ஈடேற துணை புரியட்டும்.

நம் சமூகத்தின் சமுதாய-சமய வாழ்வை வலுப்படுத்த நாங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் நம்பிக்கை வைத்து, தொடர்ந்து ஆதரவளித்துவரும் முஸ்லிம் சமூகத்திற்கு முயிஸ் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஈதுல் அத்ஹாவின் போது, பொதுமக்கள், பள்ளிவாசல் தொண்டூழியர்கள், முஸ்லிம் அமைப்புகள் மேற்கொள்ளும் முனைப்புமிக்க ஈடுபாட்டில் இந்த வலுவான சமூக உணர்வு வெளிப்படுகிறது. குர்பான் சடங்குக்குக் கிடைத்த ஆக்ககரமான செயல்பாடுகள், வலுவான சமூக உணர்வையும் நமது நம்பிக்கையில் கொண்டுள்ள கடப் பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

நல்லாசி பெற்ற துல்ஹஜ் மாதத்தின் போது நமது ஒற்றுமை உணர்வும் ஆன்மீக நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் விருப்பமும் நம்மை மென்மேலும் ஒன்றுபடுத்தி அல்லாஹ்வின் நல்லாசிகளை நாம் தொடர்ந்து அடைந்திடுவோமாக. ஆமீன், அல்லாஹும்ம ஆமீன்.

## ஹஜ் பெருநாள்

ஹஜ் பெருநாள் 2017 செப்டம்பர் முதல் நாள் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பபடும் என்று முயிஸ் முறையாக அறிவித்தது.

ஹஜ் பயணம் செய்யும் சிங்கப்பூர் முஸ்லிம்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன்படி 800 முஸ்லிம்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றலாம். கடந்த ஆண்டுகளில் 680 சிங்கப்பூரர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இந்த எண்ணிக்கை உயர்வு மகிழ்ச்சிக்குரியது என்று முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்புவகிக்கும் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார். அவர் 340 சிங்கப்பூர் ஹஜ் பயணிகளுடன் 26-8-2017 அன்று சவூதி அரேபியாவுக்குச் சென்றார்.

சவூதி அரேபியாவில் சென்ற ஆண்டு நடைபெற்ற ஹஜ் அமைச்சர் நிலைக் கூட்டத்தில் 1,000 சிங்கப்பூரர்களை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட சவூதி அரசாங்கம் 800 பேர் ஹஜ், உம்ரா பயணம் செய்யலாம் என கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்தது.






சிங்கப்பூரிலிருந்து இவ்வாண்டு ஹஜ் பயணம் மேற்கொண்ட அணியை ஹாஜி ஃபரிஹுல்லாஹ் வழிநடத்தினார். முயிஸ் இந்தப் பொறுப்பை அவருக்கு வழங்கியது.

ஃபரிஹுல்லாஹ் இதற்குமுன் 2012ல் ஹஜ் பயணம் செய்தார். ஐந்து ஆண்டுகளில் சவூதி அரேபியாவில் பயணிகளுக்கான உள்கட்டமைப்பு, தளவாட வசதிகள் குறிப்பிடத் தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளதைக் கண்டு மகிழ்ந்ததாக அவர் கூறினார்.

வெப்ப அளவு அதிகரித்திருந்ததால் அதற்கு ஏற்றபடி கூடுதலாக தண்ணீர் பருகும்படியும், உச்சமான கூட்ட நெரிசல்களில் சிக்காமல் கடமைகளை நிறைவேற்றும்படியும் ஆலோசனை வழங்கியதாகவும் ஃபரிஹுல்லாஹ் தெரிவித்தார்.

ஹஜ் யாத்திரிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முயிஸ் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது அவர்களுக்கு உதவ 25 அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் ஹாஜி ஃபரிஹுல்லாஹ் கூறினார்.

## ஹஜ் பெருநாள் குர்பான் நிகழ்ச்சி

இந்த ஆண்டு ஹஜ் பெருநாள் குர்பான் சடங்குக்காக 3,700 ஆடுகள் சிங்கப்பூருக்குத் தருவிக்கப்பட்டன. அதன் விவரங்களை பள்ளிவாசல்கள் குர்பான் குழு முன்கூட்டியே வெளியிட்டது.

அந்த ஆடுகள் 25 பள்ளிவாசல்களுக்கு வினியோகிக்கப்பட்டன. கடந்த ஆண்டு குர்பான் சடங்குக்காக 1,800 ஆஸ்திரேலிய செம்மறி ஆடுகளும் 1,700 வெள்ளாடுகளும் தருவிக்கப் பட்டன. தற்போது ஓர் ஆட்டின் விலை 485 வெள்ளி என நிர்ணயிக்கப்பட்டது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ஐந்து வெள்ளி குறைவு.

குர்பான் சடங்கில் பங்கேற்க விரும்புவோர் 25 பள்ளிவாசல்களில் ஆகஸ்டு மாத இறுதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேணடும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்படி செப்டம்பர் முதல் நாள் பள்ளிவாசல்களில் குர்பானி நடைபெற்றது.

# பிரதமரைக் கவர்ந்த மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா



பிரதமர் லீ சியென் லூங் தேசிய நினைவுச் சின்னமான நாகூர் தர்காவை முதல்முறையாகப் பார்த்து மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தார்.

நல்லிணக்கத்துடன் ஒன்றுபட்டு வாழும் பல இன, பல மொழி, பல சமய சமுதாயத்திற்கு சிங்கப்பூர் ஓர் அரிய மதிப்புமிக்க உதாரணம். இது தற்செயலாக நிகழ்ந்துவிடவில்லை. இதனை உருவாக்க அரசாங்கமும், வெவ்வேறு சமூகங்களும் ஒருங்கிணைந்து கடுமையாக உழைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமரும் அவருடைய துணைவியாரும் தெலுக் ஆயர் வீதியில் அமைந்துள்ள ஐந்து வழிபாட்டுத் தலங்களை, 19-7-2017அன்று கால்நடையாகச் சுற்றிப் பார்த்தனர். நாகூர் தர்கா, அல் அப்ரார் பள்ளிவாசல் ஆகியவை அவற்றில் அடங்கும்.

கடற்பகுதியாக அந்த நாளில் இருந்த தெலுக் ஆயர் வட்டாரத்தில் குடியேறியவர்கள் வழிபாட்டுத் தலங்களை அமைத்தனர். 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித மகான் சையது ஷாஹுல் ஹமீது காதிர் அவர்களின் நினைவுச் சின்னமாக இந்திய முஸ்லிம் சமூகத்தினர், 1827-1830ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் நாகூர் தர்காவைக் கட்டினர். சிங்கப்பூர் நாகூர் தர்கா, 1974 நவம்பர் 29ஆம் தேதி தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. தர்காவை மறுசீரமைக்கும் திட்டம் 1994ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப் பட்டது.

2008ல் தொடங்கிய முக்கிய மறுமேம்பாட்டுக்குப் பிறகு, நாகூர் தர்கா புதுத்தோற்றத்தைப் பெற்று, மரபுடைமை நிலையமாகத் திறப்பு விழா கண்டது. மரபுடைமை நிலையத்தின் காட்சிக் கூடங்களில் படங்களும், நினைவுப் பொருட்களும் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. பல இன, பல சமய, சிங்கப்பூரை உருவாக்குவதற்கு உதவிய இந்திய முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றையும், பங்களிப்பையும், மரபுகளையும், சிறப்பு அம்சங்களையும் எடுத்துரைப்பதே காட்சிக்கூடத்தின் இலக்கு.

கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், புகைப்படங்கள், நமது முன்னோடிகளின் பொருட்கள், நூல்கள் முதலானவை நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரின் பல கட்ட வளர்ச்சி வரலாற்றை இன்றைய தலைமுறையினர் தெளிவாக அறிந்து கொள்வதற்கு காட்சிக் கூடம் உறுதுணையாக அமைந்துள்ளது.

முன்னாள் அதிபர் திரு எஸ்.ஆர்.நாதன் 2011ல் மரபுடைமை நிலையத்தை அதிகாரபூர்வமாகத் திறந்துவைத்து பல அரிய ஆலோசனைகளை வழங்கினார். அவருடைய பரிந்துரைகளும் வழிகாட்டுதலும் கண்காட்சிக் கூடம் அமைப்பதற்கு உந்துசக்தியாக அமைந்ததாக தர்காவின் செயலாளர் நசீர் கனி கூறினார். நாட்டு நிர்மாணத்தில் தமிழ் முஸ்லிம் முன்னோர்களின் பங்களிப்பை எடுத்துரைக்கும் காட்சியகமே இது என்றும் அவர் தெரிவித்தார்.

தர்காவின் வடிவமைப்பும் கட்டுமானக் கலை அம்சங்களும் பிரதமரை வெகுவாகக் கவர்ந்தன. காட்சிக் கூடத்தைக் கண்டு மகிழ்ந்த அவருக்கு 1930களில் இருந்த தர்காவின் தோற்றத்தைக் கொண்ட புகைப்படம் நினைவுப் பொருளாக வழங்கப்பட்டது.



# மூத்தோரை மகிழ்வித்த நாகூர் தர்கா சமூக நிகழ்ச்சி



தெலுக் ஆயர் வீதியில் அமைந்துள்ள தேசிய நினைவுச் சின்னங்களான இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவும், யூ ஹுவாங் கொங் சீன ஆலயமும் இணைந்து மூத்தோருக்கான சமூக நிகழ்ச்சியை 30-7-2017 அன்று நடத்தின. சிங்கப்பூரின் 52வது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் இனிய நிகழ்ச்சியாகவும் இது அமைந்தது.

இரு நினைவு நிலையங்களையும் சுற்றிப் பார்த்த மூத்தோர்கள் தேசிய தினப் பாடல், உடற்பயிற்சி உத்தி முதலானவற்றில் பங்கேற்று புத்துணர்ச்சி பெற்றனர். ஹலால் முறையில் தயாரிக்கப்பட்ட சுவையான உணவையும் உண்டு மகிழந்தனர்.

நிகழ்ச்சிக்கு வருகையளித்த அனைவரும் பல சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும், சுற்றுலா மேற்கொள்ளவும் செய்துதரப்பட்ட வாய்ப்பு வசதிகள் பசுமையானவை எனப் பாராட்டினர்.

# முயிஸ் ஏற்பாட்டில் நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தில் இந்திய முஸ்லிம் தலைவர்களுக்கான பயிலரங்கு

நாகூர் தர்கா மரபுடைமை நிலையம், இந்திய முஸ்லிம் தலைவர்களுக்காக “நமது அடையாளம் நமது எதிர்காலம்” எனும் பயிலரங்கை நடத்தியது. ஜுலை 29, ஆகஸ்ட் 19 தேதிகளில் நடைபெற்ற இவற்றில் இந்திய முஸ்லிம் சமூகத்தையும் சங்கங்களையும் பள்ளிவாசல்களையும் சேர்ந்த 35 தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முயிஸ் தலைமை நிர்வாகி ஹாஜி அப்துல் ரசாக் மரிக்கார் உரையாற்றினார். தலைவர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கு அவசியமான அடிப்படைப் பண்புகளை அவர் எடுத்துரைத்தார். அனைவரையும் உள்ளடக்கும் பண்பு, கூட்டாக முயற்சி எடுக்கும் பண்பு, எதிர்காலக் கண்ணோட்டத்துடன் செயல்படும் பண்பு, ஆகியவை கடைப்பிடிக்கப்பட வேணடும் என்றார் அவர்.

“இத்தகைய நிகழ்ச்சி வேற்றுமையில் ஒற்றுமை காண வாய்ப்பளிக்கிறது. எந்த ஒரு சமூக நிகழ்ச்சியை நடத்தினாலும் தனித்து அதைச் செய்யாமல், அருகில் அமைந்துள்ள சமூக, சமயப் பங்காளிகளுடன் இணைந்து செயல்பட முனைகிறோம். இது பல இன ஒற்றுமைக்கான சீரமைக்கப்பட்ட ஒரு தளம்,” என்று நாகூர் தர்கா நிர்வாகக் குழுவின் செயலாளர் நசீர் கனி கூறினார்.

## மதரஸா மாணவர்களுக்கு விருது - பரிசளிப்பு



மதரஸா மாணவர்களுக்கு 2017 விருது வழங்கும் நிகழ்ச்சி (MSA) முயிஸ் ஏற்பாட்டில் நடைபெற்றது. 493 மாணவர்கள் விருதுகளைப் பெற்றனர். பிரதமர் லீ சியன் லூங் இந்தத் திட்டத்திற்கு 2015ல் அரசாங்கத்தின் ஆதரவை அறிவித்தார்.

சிறப்பான திறன்மிக்க மதரஸா மாணவர்களுக்கு $181,500 வழங்கப்பட்டன. 493 மாணவர்கள், 627 விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். 125 மாணவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டது அவர்களின் திறனுக்கு ஒரு சான்று. மஸ்ஜிதா பிந்தி முஹம்மது ஹம்ஸா, நஸிஃபா முர்ஷியாதா பிந்தி நசீர் ஆகியோர் பல விருதுகளைப் பெற்றனர்.

### மதரஸா மாணவர்களுக்குச் சலுகை

மதரஸா மாணவர்கள் தேசியத் தேர்வுகளுக்கு இந்த ஆண்டின்தொடக்கத்திலிருந்து கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் இந்தக் கட்டண விலக்குத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆறு முழுநேர மதரஸாக்கள் முஸ்லிம் சமூகத்தின் நிதியுதவியுடன் இயங்கி வருகின்றன. கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சு, சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்திற்கு உதவி வழங்குவதன் அடிப்படையில், மதரஸா மாணவர்கள் தேசியத் தேர்வுகளுக்குக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

### நபி மொழி

அல்லாஹ்வுக்காகப் ஒரு பள்ளிவாசலை யார் கட்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் அதைப் போன்ற ஒரு வீட்டைக் கட்டுகிறான்.

எவர் ரமலான் மாதம் முழுதும் நோன்பிருந்து பிறகு ஷவ்வால் மாதத்திலும் ஆறு நோன்புகளை நோற்பாரோ அவர் வருடம் முழுதும் நோன்பு வைத்த நன்மையைப் பெற்றுக்கொள்வார்.



## சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் சரித்திரமும் சாதனையும்!



இந்திய மரபுடைமை நிலைய அரங்கில், சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றையும் சாதனைகளையும் விரிவாக எடுத்துரைக்கும் சிறப்பு நிகழ்ச்சி 5-8-2017 பிற்பகல் முதல், மாலை வரை நடைபெற்றது. கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி நசீர் கனி ஆங்கிலத்தில் சிறப்புரையாற்றினார்.

இந்திய முஸ்லிம்கள் இருநாறு ஆண்டுகளுக்கு முன்பே சிங்கப்பூருக்கு வந்து மொழி, இலக்கியம், வணிகம், கல்வி, இதழியல், ஆன்மீகம், கட்டுமானம் முதலான அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்தார்கள். சூலியா-சோழியர் எனப்படும் சோழ மண்டல முஸ்லிம்களின் வருகைக்குப் பிறகு மலபார் முதலான இந்தியப் பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் வந்தனர். அவர்களில் தமிழ் முஸ்லிம்களின் எண்ணிக்கை 70 முதல் 80 விழுக்காடு என்று அவர் குறிப்பிட்டார். இராவுத்தர், மரைக்காயர் என தமிழ் முஸ்லிம்கள் தொழில் தொடர்பினால் பெயர் பெற்றதை அறிவோம்.

தமிழ் முஸ்லிம்கள் சிங்கப்பூரில் நிறுவிய நாகூர் தர்கா, பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி, சங்கங்கள் ஆகியவற்றையும் சமூக நிகழ்ச்சிகளையும் ஹாஜி நசீர்கனி விரிவாக எடுத்துரைத்தார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் துணைத் தலைவர் மு.அ. மசூது, பொருளாளர் ராஜா முஹம்மது ஆகியோரும் தமிழ் முஸ்லிம்களின் மொழி, கல்வி வளர்ச்சிப் பங்களிப்பு குறித்துப் பேசினர். மதரஸாக்களில் அரபு மொழி கற்பிக்கப்பட்டாலும், அரபுத் தமிழ் ஜாவி ஆகியவற்றையும் நமது சமூகம் வளர்த்ததைச் சுட்டிக்காட்டினர்.



நிகழ்ச்சியின் நிறைவாக கடையநல்லூர் முஸ்லிம் சங்கம் இசை நிகழ்ச்சியை மரபுடைமை நிலைய அரங்கில் நடத்தி அனைவரையும் மகிழ்வித்தது.



# மாதர்களின் சமூக இலக்கியப் பணி

சிங்கப்பூரின் சமூக சமய மொழி இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றிவரும் தமிழ் முஸ்லிம்கள் மாதர்களின் பட்டியல் விரிவானது, அவர்களின் பங்களிப்பை நாடியில் பகிர்ந்து கொள்ளலாம். தொடக்கக் கண்ணோட்டமாக மூவரின் பணிகளைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

## ஷரீஃபா பீவி



ஷரீஃபா பீவி கடந்த ஆறு ஆண்டுகளாக இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றத்தின் (IMSSA) தலைவியாக இருந்தார், பதினைந்து ஆண்டுகளாக அந்த மன்றத்தில் தொண்டூழியம் செய்து வருகிறார்.

52 வயதான ஷரீஃபா பீவிக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர், கணவர் அப்துல் ஹாடி, மூத்த பதிவாளர். மூத்த மகளுக்கு 25 வயது. அவர் SMU-யில் MSC பட்டப்படிப்பை முடித்துவிட்டார். 23 வயது மகன் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் படித்துக் கொண்டிருக்கிறார். இளைய மகனுக்கு 19 வயது. பிள்ளைகள் இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றத்தில் தொண்டூழியர்களாக இருக்கிறார்கள்.

ஷரீஃபா பீவி 2000ஆம் ஆண்டு இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றத்தில் சேர்ந்தார். மதரஸாவில் படிக்கும் மாணவர்களுக்கு அவர் குர்ஆன் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். 1998ல் இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றம் சுமார் 30 மாணவர்களுடன் மட்டுமே தொடங்கப் பட்டது. தற்போது 1,500 மாணவர்கள் இருக்கிறார்கள்.

"ஆசிரியர்கள், பொறியாளர்கள், வல்லுநர்கள், இல்லத்தரசிகள் மற்றும் மாணவர்கள் ஆகியோருடன் 300க்கு மேற்பட்ட பல துறைகளைச் சார்ந்த தொண்டூழியர்கள் இங்கு இருக்கின்றனர். நம் சமூகத்திலுள்ள வசதி குறைந்தோர்களை நாம் அரவணைக்கிறோம். வார இறுதியில் அந்-நஹ்டா மற்றும் தாருல் மக்மூர் பள்ளிவாசல்களில் மதரஸா வகுப்புகள் நடத்துவதோடு, சமூக மன்றங்களுடன் சேர்ந்து, வசதி குறைந்த குடும்பங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும், தனியே வசிக்கும் முதியோர் களுக்கும் உதவிக்கரம் நீட்டி வருகிறோம். அண்மையில், நாங்களே உணவு தயார் செய்து, மார்சிலிங் மற்றும் கபுன் பாரு வட்டாரத்தில் வசிக்கும் ஏழைகளுக்கு மாதம் ஒரு முறை உணவளித்து வருகிறோம்," என்று பணிகளை விவரிக்கிறார் ஷரீஃபா பீவி.

சமூக நல்லிணக்கம் மற்றும் தொண்டூழியத்தை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு நிகழ்ச்சிகளையும் இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றமும் முயிஸ¬ும் (MUIS) சேர்ந்து செய்து வருகின்றன. எங்களிடம் இருக்கும் ஆசிரியர்கள் தொடக்க நிலை ஆறு மற்றும் உயர் நிலை நான்கு/ஐந்து வகுப்பு மாணவர்களுக்குத் துணைப்பாட வகுப்புகளும் நடத்தி வருகிறார்கள். அதேபோன்று, இங்குள்ள தாதியர்களும், மருத்துவத் துறையில் பணியாற்றுபவர்களுடன் சேர்ந்து, இலவச உடல்நலப் பரிசோதனை, இரத்த தானம், ஆரோக்கியப் பட்டறைகள் போன்ற பயனுள்ள சேவைகளை நம் சமூகத்திற்கு ஆற்றி வருகின்றனர்.

"என் பிள்ளைகளுக்காக இந்திய முஸ்லிம் சமூக சேவை மன்றத்தில் நான் சேர்ந் திருந்தாலும், என் சேவையின் மூலம் எனக்குக் கிடைத்த மன திருப்தியும், மன நிறைவும், என்னைத் தொடர்ந்து இந்தச் சமூகத்திற்குச் செயலாற்ற வைத்துள்ளது. இத்தனை ஆண்டுகள் நான் ஆற்றிய சேவையில் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய மன திருப்தி என்னவென்றால், நாம் நூற்றுக்கணக்கான இளையர்களைத் தொண்டூழியத்தில் ஈடுபடுத்துவதோடு, மற்றவர்களுக்கு உதவுவதில் உள்ள இன்பத்தை அவர்களுக்குக் கற்பித்திருக்கிறோம் என்பதே ஆகும்," என்கிறார் ஷரீஃபா பீவி.

---

## நூர்ஜஹான் சுலைமான்

எழுத்தாளர், கவிஞர், நூர்ஜஹான் சுலைமான்



சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் சமூகத்துக்கு பெருமை சேர்த்துவருகிறார். சிறுகதைகளையும் கவிதை களையும் நீண்ட காலமாக எழுதிவரும் அவர், அவற்றைத் தொகுத்து ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார்.

வானொலி நாடகங்கள் வாயிலாகவும் ரசிகர் வட்டத்தைப் பெற்ற அவர், கவிச்சோலை, கவிமாலை முதலான நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார்.

நூர்ஜஹான் சுலைமான் 2005ஆம் ஆண்டில் தமது சிறுகதைகளையும் கவிதை களையும் தொகுத்து "வேரில் நிற்கும் விழுதுகள்" எனும் நூலாக வெளியிட்டார். பொழுது புலருமா, உயிர் நிலவு, வேர்கள், தையல் மிஷின் ஆகிய படைப்புகளை அடுத்த கட்டமாக அவர் வெளியிட்டார்.

பொன்விழாப் பூமகள், இமைகளாய்க் காப்போம், கவிதை நூல்களை முதல் பதிப்புகளாக இவ்வாண்டில் வெளியிட்டு இருக்கிறார் நூர்ஜஹான் சுலைமான்.

சிங்கப்பூர் 50ஆம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் பொன்விழாப் பூமகள் கவிதையின் சில வரிகள்:

அனைவருக்கும் வீடு
ஆரோக்கிய வாழ்க்கை
அயல்நாட்டுக் கல்வி
அணுக்க உறவுகள்
திறமைக்கு முன்னுரிமை,
முதுமைக்கும் பாதுகாப்பு என
எல்லாம் வழங்கி
இமை போல காத்துவரும்
அற்புத நங்கை! கற்பகத் தரு!
அரை நூற்றாண்டில்
அதிசய வளர்ச்சி!
குறையே இல்லாக்
குடிமக்கள் வாழ்க்கை!
பொன்விழாக் காணும்
பூ மகள் வாழ்க!

---

## பீரம்மாள் பீர் முகம்மது



நல்ல வாசகராக இருப்பவர் நிச்சயமாக ஒருநாள் நல்ல எழுத்தாளராக ஆகலாம்! வாசிப்பது சுவாசிப்பது போல, இயற்கையை மிகவும் நேசித்து ரசித்து வளர்ந்தேன், அதே நேரத்தில் பல புத்தகங்கள் நாவல்களை தொடர்ந்து படித்தேன், அப்போதே எழுத ஆர்வம் ஏற்பட்டது - சிங்கப்பூர் எழுத்தாளர் பீரம்மாள் பீர் முகம்மதுவின் அனுபவ வரி இது. அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது பிரகாசம் சிறுகதை தொகுப்பு.

அர்த்தமுள்ள வாழ்க்கை, அடுத்த வீடு, ஆத்மாவின் சிறைச்சாலை, இனிய நெஞ்சங்கள், மன அலைகள், கல்மனம் கரையுமா?, சொல்லத் தான் நினைக்கிறார், பிரகாசம், முதலான சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. எம்.கே.நாராயணன், ஜே.எம்.சாலி, பொன் சுந்தரராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

...அடுத்த பக்கம் பார்க்கவும்

முன் பக்க தொடர்ச்சி...

பீரம்மாள் பீர் முகம்மதுவின் நாடகங்களின் தொகுப்பு நூல் வெற்றி நிச்சயம். சிறுவர்களுக்கு அவர் எழுதிய இருபது வானொலி நாடகங்களின் தொகுப்பு இது.

பீரம்மாள் தமிழ்நாட்டில் தென்காசியில் பிறந்து தமிழ், ஆங்கிலம், அரபி, மொழிகள் படித்து திருமணத்திற்குப் பிறகு 1980ல் சிங்கப்பூருக்கு வந்து எழுதத் தொடங்கினார். பத்திரிகையிலும் வானொலியிலும சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்களை எழுதிவந்துள்ள அவர் அவற்றின் எண்ணிக் கையை தமது நூலில் பட்டியலிட்டிருக்கிறார். 1987ம் ஆண்டிலிருந்து சிங்கப்பூர் வானொலியில் சிறுவர் நாடகங்கள், காட்சியும் கானமும், இசையும் கதையும், ஆகியவற்றை எழுதிவந்துள்ள பீரம்மாள் வானொலியில் பல முறை பரிசுகளைப் பெற்றுள்ளார்.

சிண்டாவிலும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்துள்ள பீரம்மாள் பீர் முகம்மது சிங்கப்பூர் எழுத்தாளர் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

## புதுப்பிக்கப்பட்ட ஹாஜி முஹம்மது சாலே பள்ளிவாசல்



பால்மர் சாலையிலுள்ள ஹாஜி முஹம்மது சாலே பள்ளிவாசல் புதுப்பிப்புப் பணிகளுக்குப் பிறகு திறக்கப்பட்டுள்ளது. இன்றைய தேவைகளுக்கு ஏற்ப புதிய வசதிகளுடன் பள்ளிவாசலை மேம்படுத்தும் திட்டம் 2015ல் தொடங்கப்பட்டது.

புதுப்பிப்புப் பணிக்காக மூடப்பட்டிருந்த பள்ளிவாசல் 1.46 மில்லியன் வெள்ளி செலவில் மறுசீரமைக்கப்பட்டது. 21-7-2017 வெள்ளிக் கிழமை ஹாஜி முஹம்மது சாலே பள்ளிவாசல் திறக்கப்பட்டது. 144 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட இந்தத் தொழுகைக் கூடம் இதற்குமுன் 1995ஆம் ஆண்டில் புதுப்பிக்கப் பட்டது, 900 பேர் தொழுது கொள்ளும் இடவசதியுடைய இப்பள்ளிவாசலை, அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் திறந்து வைத்தார்.





## பல இன, பல சமய நண்பர்களுடன் நோன்புப் பெருநாள் உபசரிப்பு




பல இன, பல சமய தலைவர்களுடன் நோன்புப் பெருநாள் தேநீர் உபசரிப்பு நிகழ்ச்சிக்கு முயிஸ் ஏற்பாடு செய்திருந்தது. 6-7-2017ல், பீஷானிலுள்ள அந்-நஹ்டா பள்ளிவாசலின் நல்லிணக்க மையத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. சிங்கப்பூர் முஃப்தி, டாக்டர் பத்ரிஸ் பக்ரம், அனைவரையும் வரவேற்று, உரையாற்றினார்.

## பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி





சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியை 29-7-2017 அன்று நடத்தியது. சங்கத்தின் இளையர்களின் முயற்சியினால் அல் அமீன் பள்ளிவாசல் பல நோக்கு மண்டபத்தில் நிகழச்சி இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஹாஜி அசன் மசூத் சங்கத்திற்கு சொந்தமான இடம் ஒன்றை வாங்குவதன் அவசியத்தை தமது உரையில் வலியுறுத்தினார். அதற்காக பொருளாதாரத் தேவையையும் அவர் எடுத்துரைத்தார். செயலாளர் மஞ்சா இஷாக் சங்க உறுப்பினர்கள் சந்தா தொகையை முறையாகச் செலுத்திவர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சிறார்களை மகிழ்விக்க மாயாஜால வித்தைக் காட்சியும் இடம் பெற்றது. பெருநாள் சந்திப்பு ஒன்றுகூடல் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து உற்சாகத்துடன் நடத்திய இளையர்களுக்கும் மற்ற அனைவருக்கும் துணைத் தலைவர் ஹாஜி முஹம்மது ஜாஃபர் நன்றி கூறினார். சங்க உஸ்தாத் அசன் அலி துஆ ஓத நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.

# பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசென்ட் பல்கலைக்கழக சிங்கப்பூர் கிளை ஆண்டுவிழா

பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசென்ட் பல்கலைக்கழகம் முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை, அதன் ஐந்தாம் ஆண்டு விழாவையும், சிங்கப்பூர் தேசிய தினத்தையும் கொண்டாடியது. உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் 12-8-2017 அன்று மாலை முதல் இரவு 9 மணி வரை, பல சுவையான அங்கங்களுடன் விழா நடைபெற்றது.

சுற்றுப்புற நீர்வள அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். சங்கத்தின் சார்பாக சிலருக்கு கிரெசென்டியன் விருதுகள் வழங்கப்பட்டன. MES குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.அப்துல் ஜலீல், தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் சிங்கப்பூர் கிளையின் தலைவர் டாக்டர் கே.எம்.தீன் ஆகியோர் விருதுகளைப் பெற்றனர். கிரெசென்ட் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்களும் கவுரவிக்கப்பட்டனர்.

கிரெசென்ட் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு சிறப்பு மலரை அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி வெளியிட்டார். அதன் முதல்பிரதியை சிண்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி கே.பரதன் பெற்றுக்கொண்டார்.



சங்கத்தின் தலைவர் முஹம்மது இப்ராஹிம், பொதுச் செயலாளர் முஹம்மது ரஹ்மான், நிர்வாகக் கழகத்தின் தலைவர் அப்துல் கைர் அப்துல் ரஹ்மான் புஹாரி, அஹமத் ஏ.ஆர். புஹாரி, துணை வேந்தர் டாக்டர் சாஹுல் ஹமீத் பின் அபூபக்கர், பதிவதிகாரி பேராசிரியர் முருகேசன் முதலானோர், பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரெசென்ட் பல்கலைக் கழகத்தின் நற்பணிகளை எடுத்துரைத்தனர். 2011ல் தொடங்கப்பட்ட சிங்கப்பூர் கிளை, சிண்டா, ஜாமியா, ஸ்ரீ நாராயண மிஷன், முஹம்மதியா நலனபிவிருத்தி இல்லம், முதலான அமைப்புகளுடன் இணைந்து கருத்தரங்குகளையும் கல்வி கலை நன்கொடை நிகழ்ச்சிகளையும் நடத்திவருகிறது. ஐந்தாம் ஆண்டு விழாவின் நிறைவாக சிண்டா வளாகத்தில் விருந்துபசரிப்பு நடைபெற்றது.

# இன்றைய பல்லின சமூகத்தில் இஸ்லாமிய சிந்தனை பாட வகுப்பு





இன்றைய உலகலாவிய சூழலில், பல இன, பல சமயங்களுக்கு இடைய வாழ்ந்து வரும் முஸ்லிம் சமூகத்தினர் எதிர்நோக்கும் பல சிக்கலான பிரச்சனைகளுக்கு, கேள்விகளுக்கு, தீர்வு-விடைகள் சொல்லும் சவால் மிக்க நிலையில் உள்ளனர் நமது மார்க்க ஆசிரியர்கள், மற்றும் இஸ்லாமியத் தலைவர்கள்.

ஆகவே, அவர்களை இதற்கு தயார் செய்ய, முயிஸ், எஸ். இராஜரத்தினம் அனைத்துலக ஆய்வு கல்விக்கூடத்துடன் இணைந்து, 2 வார கல்வித்திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இத்திட்டத்தில், சிங்கப்பூர், மற்றும், கிழக்காசியா, தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளிலிருந்து, இஸ்லாமிய பாடக்கல்வியை பயிலும், மற்றும் பயின்று பட்டம் பெற்ற பட்டதாரிகள், இஸ்லாமிய சமூகத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.